Sl. No.: **20579753** **GT112**

| பதிவு எண் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|

# 2013

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் வினாத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்துமுனைப் பேனாவினால் நீங்கள் எழுத வேண்டும். தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் [B] என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

**ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET**

SEAL

1. உடம்பிடை தோன்றிற்றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி

அடல் உறச்சுட்டு வேறொர் மருந்தினால் துயரம் தீர்வர்- இத்தொடரைக் கூறியவர்

(A) இளங்கோவடிகள்

(B) சீத்தலை சாத்தனார்

(C) கம்பர்

(D) வால்மீகி

2. 'பிள்ளைத் தமிழ்' என்ற பெயரில் ஒரு தனிநூலினைச் செய்த முதல் ஆசிரியர் யார்?

(A) ஒட்டக்கூத்தர்

(B) புகழேந்தி

(C) குமரகுருபரர்

(D) பகழிக்கூத்தர்

3. திருமங்கையாழ்வார் சொல்லணியில் அமைத்துப் பாடிய நூல் எது?

(A) திருக்குறுந்தாண்டகம்

(B) திருவெழுக்கூற்றிருக்கை

(C) திருநெடுந்தாண்டகம்

(D) திருவந்தாதி

4. விடைத்தேர்க: வீரமா முனிவர் இயற்றியுள்ள ஐந்திலக்கணங்களைக் கூறும் இலக்கண நூல் எது?

(A) முதுமொழி மாலை

(B) செந்தமிழ் இலக்கணம்

(C) கொடுந்தமிழ் இலக்கணம்

(D) தொன்னூல் விளக்கம்

5. “எறும்பும் தன்கையில் எண் சாண்” - எனப்பாடியவர்

(A) கபிலர்

(B) ஒட்டக்கூத்தர்

(C) ஔவையார்

(D) புகழேந்தி

6. பாவை நூல்களில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் நூல் எது?

(A) தைப்பாவை

(B) திருப்பாவை

(C) திருவெம்பாவை

(D) காவியப்பாவை

7. காந்திமதியின் வருகைப்பருவத்துப் பாடலுக்காக வைரக்கடுக்கனைப் பரிசாகப் பெற்ற புலவர் யார்?

(A) சிவஞான முனிவர்

(B) பலபட்டடைச் சொக்கநாதர்

(C) அழகிய சொக்க நாதர்

(D) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

8. சைவராக இருந்தும் சமண காப்பியமான சீவகசிந்தாமணிக்கு உரை எழுதியவர் யார்?

(A) பேராசிரியர்

(B) அடியார்க்கு நல்லார்

(C) நச்சினார்க்கினியர்

(D) ந.மு. வேங்கடசாமி

9. கீழ்க்காண்பவர்களுள் எவர் திருக்குறளுக்கு உரை எழுதவில்லை

(A) நச்சர்

(B) திருமலையர்

(C) அடியார்க்கு நல்லார்

(D) தாமத்தர்

10. "ஆட்சிக்கும் அஞ்சாமல் யாவரேனும்

ஆள்கவெனத் துஞ்சாமல், தனது நாட்டின்

மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவான்" -என்று பாடியவர் யார்?

(A) பாரதிதாசன்

(B) கண்ணதாசன்

(C) முடியரசன்

(D) பாரதியார்

11. 'கோவலன் பொட்டல்' என வழங்கப்படும் இடம்

(A) கோவலன் பொட்டலம் விரித்து உணவு அருந்திய இடம்

(B) கோவலன் கொலைக்களப்பட்ட இடம்

(C) கோவலன் சிலம்பு விற்க வந்த இடம்

(D) கண்ணகி கோவலன் வாழ்ந்த இடம்

12. பாரதிக்கு 'மகாகவி'-என்ற பட்டம் கொடுத்தவர் யார்?

(A) வ. ரா

(B) உ. வே. சா

(C) கி. ஆ. பெ. வி

(D) லா. ச. ரா

13. பொருந்தா இணையைத் தேர்க:

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (A) | மா | – | அழகு |
| (B) | மீ | – | உயர்ச்சி |
| (C) | மூ | – | மூப்பு |
| (D) | மை | – | மேம்பாடு |

14. "ஏழையின் குடிசையில்

அடுப்பும் விளக்கும் தவிர

எல்லாமே எரிகின்றன"

இக்கவிதை வரிகளைப் பாடியவர் யார்?

(A) அறிஞர் அண்ணா

(B) வல்லிக்கண்ணன்

(C) பட்டுக்கோட்டையார்

(D) மீரா

15. "வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமும்

கொப்பத் தொருகளிற்றால் கொண்டோன்" - இவ்வரிகள் யாரைக் குறிப்பிடுகிறது?

(A) இராசேந்திரன்

(B) முதல் இராசராசன்

(C) இராசாதிராசன்

(D) இராசமகேந்திரன்

16. "நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்

பகலும்பாற் பட்டன் றிருள்" - இக்குறள் இடம்பெற்றுள்ள இயல் எது?

(A) இல்லறவியல்

(B) துறவறவியல்

(C) ஊழியல்

(D) பாயிரவியல்

17. செய் - என்னும் வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு:

(A) செய்தீர்

(B) செய்வாய்

(C) செய்தவன்

(D) செய்தான்

18. சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான சொற்றொடர் எழுதுக:

(A) "கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே"

(B) "கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பே"

(C) "களிப்பே களிப்பருளும் கற்றார்க்கும் கல்லார்க்கும்"

(D) " களிப்பருளும் களிப்பே கற்றார்க்கும் கல்லார்க்கும்"

19. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல்

(A) திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே இறப்பு நிகழ்வெதிர் வென்னும் முக்காலமும்

(B) முக்காலமும் வுரைப்பது குறத்திப்பாட்டே இறப்பு நிகழ்வெதிர் திறப்பட வென்னும்

(C) இறப்பு நிகழ்வெதிர் வென்னும் முக்காலமும் திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே

(D) குறத்திப்பாட்டே முக்காலமும் வுரைப்பது இறப்பு நிகழ்வெதிர் வென்னும் திறப்பட

20. விடைக்கேற்ற வினாவைத் தேர்க:

'பெற்றதை வழங்கி வாழும் பெருங்குணம் பெறுதல் இன்பம்'

(A) பெற்றதை வழங்கி வாழும் பெருங்குணத்தால் பெறுவது எது?

(B) பெற்றதை வழங்கி ஏன் வாழ வேண்டும்?

(C) பெருங்குணம் எப்போது வரும்?

(D) பெறுவது எது?

21. பொருந்தா இணையைக் கண்டறிக:

(A) தினம் – நாள்

(B) நெருநல் – நேற்று

(C) சலவர் – நல்லவர்

(D) மாரன் – மன்மதன்

22. வேர்ச்சொல் தேர்க:

பற்றுக பற்றற்றான் பற்றினை: அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு

(A) பற்றுக

(B) பற்றற்றான்

(C) பற்றி

(D) பற்று

23. "நான்மணிமாலை" — என்ற சொற்றொடர் குறிப்பது

(A) முத்து, வைரம், வைடூரியம், மாணிக்கம்

(B) முத்து, பவளம், மரகதம், மாணிக்கம்

(C) முத்து, மரகதம், கெம்பு, மாணிக்கம்

(D) முத்து, பவளம், வைரம், மாணிக்கம்

24. சீறாப்புராணத்தில் தீர்க்கதரிசனத்தைக் கூறுவது

(A) நுபுவத்துக் காண்டம்

(B) விலாதத்துக் காண்டம்

(C) ஹிஜ்ரத்துக் காண்டம்

(D) மேற்கூறிய அனைத்தும்

25. 'வள்ளைக்கு உறங்கும் வளநாடு'

வள்ளை – என்பதன் பொருள் யாது?

(A) நெல் குத்தும் போது பெண்கள் பாடும் பாட்டு

(B) நடவு நடும் போது பெண்கள் பாடும் பாட்டு

(C) கும்மியடிக்கும் போது பெண்கள் பாடும் பாட்டு

(D) இவை எதுவும் இல்லை

26. 'மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும்' என்ற உயிரியியல் தொழில்நுட்பத்தை அறிவுறுத்தும் நூல்

(A) தேவாரம்

(B) திருவாசகம்

(C) திருக்கோவையார்

(D) திருப்பள்ளியெழுச்சி

27. "ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை" – இப்பாடலடியில் அமைந்துள்ளவாறு பின்வருவனவற்றுள் எது தவறானது?

(A) சீர்மோனை அமைந்துள்ளது

(B) சீர் முரண் அமைந்துள்ளது

(C) சீர் இயைபு அமைந்துள்ளது

(D) கீழ்க்கதுவாய்மோனை அமைந்துள்ளது

28. தனிவாக்கியம் குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

(A) வினாப் பொருள் தரும் வாக்கியம்

(B) ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடியும்

(C) தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வரும்

(D) ஒரு முதன்மை வாக்கியம் ஒரு துணை வாக்கியத்துடன் சேர்ந்து வரும்

29. "திருவள்ளுவர் தோன்றிராவிட்டால் தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றிராவிட்டால், தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது" எனக் கூறியவர்

(A) கி.வா.ஜ.

(B) கி.ஆ.பெ.வி.

(C) திரு.வி.க.

(D) உ.வே.சா.

30. "தெண்டன் இட்டது வள்ளுகிர் திண்டிறல் புலியே" – இத்தொடரில் 'திண்டிறல்' என்னும் சொல்லிற்கு

(A) கொடுமையான

(B) கடுமையான

(C) எடுப்பான

(D) உறுதியான

31. துரைமாணிக்கம் என்ற இயற்பெயரைக் கொண்டவர்

(A) மீரா

(B) முடியரசன்

(C) கண்ணதாசன்

(D) பெருஞ்சித்திரனார்

32. 'ஏற்பாடு' என்பதன் பொருள்

(A) சூரியன் உதிக்கும் நேரம்

(B) ஏற்றப்பாட்டுப்பாடுதல்

(C) சந்திரன் தோன்றும் நேரம்

(D) சூரியன் மறையும் நேரம்

33. 'க' – என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு தவறான பொருள் எது?

(A) அரசன் (B) காற்று

(C) மயில் (D) காத்தல்

34. 'சலவரைச் சாரா விடுதல் இனிதே'

'சலவர்' – என்றச் சொல்லின் ஆங்கிலச்சொல்

(A) Sorrow full person

(B) Importer

(C) Violent person

(D) Deceit full person

35. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) சீராட்டு தாலாட்டு நீராட்டு பாராட்டு

(B) தாலாட்டு சீராட்டு பாராட்டு நீராட்டு

(C) நீராட்டு பாராட்டு சீராட்டு தாலாட்டு

(D) பாராட்டு நீராட்டு தாலாட்டு சீராட்டு

36. செயப்பாட்டு வினைச்சொற்றொடரைக் கண்டறிக.

(A) நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது

(B) தச்சன் நாற்காலியைச் செய்தான்

(C) நாற்காலியைச் செய்தவன் தச்சன்

(D) நாற்காலியைத் தச்சன் செய்தான்

37. கனி முன் நேர் வருவதும் கனி முன் நிரை வருவதும்

(A) கலித்தளை

(B) வஞ்சித்தளை

(C) இயற்சீர் வெண்டளை

(D) வெண்சீர் வெண்டளை

38. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பி தேரினும் அஃதே துணை – கீழ்க்காணும் சொற்களுள் எதிர்ச்சொல்லைக் கண்டறிக :

(A) பரிந்து × வெறுத்து

(B) பரிந்து × விரும்பி

(C) தெரிந்து × உணர்ந்து

(D) தெரிந்து × ஆராய்ந்து

39. 'மூதூர்' எத்திணைக்குரிய ஊர்?

(A) மருதம்

(B) பாலை

(C) குறிஞ்சி

(D) நெய்தல்

40. பின்வருவனவற்றுள் 'ஈறு போதல்', 'இனமிகல்' என்னும் விதிகளின்படி புணராதது

(A) நெடுங்கடல்

(B) செங்கடல்

(C) கருங்கடல்

(D) கருங்குயில்

41. பொருந்தாத இணையைக் கண்டறிக :

(A) வீரமாமுனிவர் – பரமார்த்த குருகதை

(B) தேவநேயப்பாவாணர் – தமிழர் திருமணம்

(C) திரு.வி.க. – சைவத்திறவு

(D) பெருஞ்சித்திரனார் – தமிழ்ச்சோலை

42. பின்வருவனவற்றுள் பொருந்தும் இணையைத் தேர்ந்தெடு :

| | செரு | | செறு |
|---|---|---|---|
| (A) | சண்டை | – | வயல் |
| (B) | போர் | – | சிறிய |
| (C) | போர்க்களம் | – | குளம் |
| (D) | கோபப்படு | – | போரிடு |

43. 'அழுது அடியடைந்த அன்பர்' – என்னும் தொடர் யாரைக் குறிக்கிறது?

(A) அருணகிரியார்

(B) சம்பந்தர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

44. 'என்றுமுள தென்தமிழ்' – என்னும் தொடரை இயம்பியவர் யார்?

(A) கம்பர்

(B) பாரதியார்

(C) பாரதிதாசன்

(D) வள்ளலார்

45. பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு

பருமணி பகராநெற் – இத்தொடரில் 'புயல்' – என்னும் சொல்லிற்கு பொருள்

(A) வானம்

(B) காற்று

(C) மேகம்

(D) நீர்

46. கீழ்க்காணும் விடைகளில் எது சரியானது?

(A) சே – சோலை

(B) சோ – சிவப்பு

(C) கா – மதில்

(D) மா – விலங்கு

47. 'ஷெல்லிதாசன்' என்று தன்னைக் கூறிக் கொண்டவர் யார்?

(A) சுப்பிரமணிய பாரதியார்

(B) சுத்தானந்த பாரதியார்

(C) சோமசுந்தர பாரதியார்

(D) சுப்ரமணிய சிவா

48. குண்டலகேசிக்கு எதிராக எழுந்த வாதநூல் எது?

(A) சூளாமணி

(B) நாககுமார காவியம்

(C) யசோதர காவியம்

(D) நீலகேசி

49. விடைத்தேர்க: இலக்கியச் செய்திகளோடு அறிவியல் துறைப்பொருள்களையும் முதன் முதலாகச் சேர்த்து விளக்கம் தந்த நூல் எது?

(A) அபிதான கோசம்

(B) அபிதான சிந்தாமணி

(C) விவேக சிந்தாமணி

(D) சீவக சிந்தாமணி

50. "திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது" - என்று கூறியவர் யார்?

(A) காந்திஜி

(B) நேருஜி

(C) இராஜாஜி

(D) நேதாஜி

51. "ஆயுள் நாள் முழுவதும் தமிழ்மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்கக் கூடிய வாடாத கற்பகப் பூச்செண்டு" - என்று கவிமணியின் பாடலைப் பாராட்டியவர் யார்?

(A) வ. உ. சிதம்பரம்

(B) டி. கே. சிதம்பரம்

(C) சிதம்பர சுவாமி

(D) சிதம்பர நாதன்

52. திரு. வி. கல்யாணசுந்தரனாரின் பயண இலக்கிய நூல் எது?

(A) யான் கண்ட இலங்கை

(B) எனது இலங்கைச் செலவு

(C) யான் கண்ட ஜப்பான்

(D) உலகம் சுற்றிய தமிழன்

53. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" - எனப்பாடியவர்

(A) அரிசில் கிழார்

(B) மோசிகீரனார்

(C) ஔவையார்

(D) பரணர்

54. சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென்மொழிப் புலவர் போற்ற அரங்கேறிய நூல் எது?

(A) பெரிய புராணம்

(B) திருவிளையாடற்புராணம்

(C) கந்தபுராணம்

(D) திருவாசகம்

55. பெரியபுராணத்தில் யாருடைய வரலாறு மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது?

(A) திருநாவுக்கரசர்

(B) திருஞானசம்பந்தர்

(C) சுந்தரர்

(D) காரைக்கால் அம்மையார்

56. சுந்தரர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் எது?

(A) திருச்செங்குன்றம்

(B) திருவெண்ணெய் நல்லூர்

(C) திருச்செந்தூர்

(D) திருவாரூர்

57. எழுத்து என்னும் இதழில் புதுக்கவிதைகளைப் படைத்தவர்

(A) மீரா

(B) இன்குலாப்

(C) தருமு சிவராமு

(D) ந. பிச்சமூர்த்தி

58. மனிதர்களின் மாறுபட்ட மன விகாரத்தை எடுத்து உணர்த்தும் "ஈஸ்வரலீலை" என்னும் கதைநூலின் ஆசிரியர்

(A) லா.ச. ராமாமிருதம்

(B) சி. சு. செல்லப்பா

(C) ந. பிச்சமூர்த்தி

(D) தி. ஜானகிராமன்

59. முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழை இயற்றியவர்

(A) குமர குருபரர்

(B) பலபட்டடைச் சொக்கநாதர்

(C) சேக்கிழார்

(D) சிவஞான சுவாமிகள்

60. இந்திய நூலகத் தந்தை எனப்போற்றப்படுகிறவர்

(A) உ.வே. சாமிநாத அய்யர்

(B) மாயூரம் வேதநாயகம் பிள்ளை

(C) சீர்காழி சீ. இரா. அரங்கநாதன்

(D) தஞ்சை வாணன்

61. 'தேம்பாவணி' நூலில் உள்ள படலங்களின் எண்ணிக்கை

(A) 39 படலங்கள்

(B) 30 படலங்கள்

(C) 32 படலங்கள்

(D) 36 படலங்கள்

62. பொருத்துக:

| | புலவர் | | நூற்பெயர் |
|---|---|---|---|
| (a) | முடியரசன் | 1. | ஆனந்தத் தேன் |
| (b) | சச்சிதானந்தன் | 2. | மாங்கனி |
| (c) | குமரகுருபரர் | 3. | காவியப்பாவை |
| (d) | கண்ணதாசன் | 4. | சகலகலாவல்லிமாலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

63. மலரின் பருவத்தைக் குறிக்காத பெயர் எது?

(A) அகரு

(B) அலர்

(C) முகை

(D) வீ

64. 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) திரு. வி. க

(B) கவிமணி

(C) இரசிகமணி

(D) நாமக்கல் கவிஞர்

65. 'கிளியை வளர்த்துப் பூனையின்

கையில் கொடுத்தது போல' - என்னும்

உவமை உணர்த்தும் பொருள் யாது?

(A) இன்பம்

(B) வருமுன் காத்தல்

(C) மகிழ்ச்சி

(D) துன்பம்

66. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க:

(A) வைகுதல் வைகறை வைகலும் வைகல்

(B) வைகறை வைகுதல் வைகல் வைகலும்

(C) வைகலும் வைகல் வைகுதல் வைகறை

(D) வைகல் வைகலும் வைகறை வைகுதல்

67. வாக்கியங்களைக் கவனி:

கூற்று (A) : எ.கா "நான் புத்தகம் கொண்டு வருகிறேன்" என்று பவானி, காயத்ரியிடம் கூறினாள்

காரணம்(R) : ஒருவர் கூறியதை அப்படியே கூறுவது மேற்கோள் குறியீடு இடம் பெறும் தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும் என்பது நேர்க்கூற்று ஆகும்

(A) இவற்றுள் (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல

(B) இவற்றுள் (A) தவறு. ஆனால் (R) சரி

(C) இவற்றுள் (A) சரி. ஆனால் (R) தவறு

(D) இவற்றுள் (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

68. இலக்கணக் குறிப்புச் சொல்லைத் தேர்க:

'பண்புப் பெயர்'

(A) திட்பம்

(B) ஆட்டம்

(C) கோடல்

(D) பெறுதல்

69. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க:

(A) தோப்பு துப்பு தீர்ப்பு தப்பு

(B) துப்பு தோப்பு தப்பு தீர்ப்பு

(C) தப்பு தீர்ப்பு துப்பு தோப்பு

(D) தப்பு தீர்ப்பு தோப்பு துப்பு

70. பொருந்தா இணையைக் கண்டறிக:

(A) சுவடி – நூல்

(B) வெய்யோன் – திங்கள்

(C) செட்டு – சிக்கனம்

(D) சிந்தை – உள்ளம்

71. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல்

(A) தமிழில் பேசுதல் தமிழறிந்தாரிடம் தமிழர் தகுதி மிகு பண்பாகும்

(B) தமிழறிந்தாரிடம் தமிழர் தகுதி மிகு பண்பாகும் தமிழில் பேசுதல்

(C) தகுதி மிகு பண்பாகும் தமிழில் பேசுதல் தமிழறிந்தாரிடம் தமிழர்

(D) தமிழர் தமிழறிந்தாரிடம் தமிழில் பேசுதல் தகுதிமிகு பண்பாகும்

72. 'கற்றவனுக்குக் கட்டுச் சோறு வேண்டாம்' என்று குறிப்பிடும் இலக்கியம்

(A) மூதுரை
(B) நாலடியார்
(C) பழமொழி நானூறு
(D) நான்மணிக்கடிகை

73. எவ்வகை வாக்கியம்?

மாணவன் பாடம் படித்தில்ன்

(A) எதிர்மறைத் தொடர்
(B) பொருள் மாறா எதிர்மறைத் தொடர்
(C) உடன்பாட்டுத் தொடர்
(D) கலவைத் தொடர்

74. தக்கார் தகவுஇலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும் - இக்குறளில் அமைந்துள்ள தக்கார்-எச்சத்தால் என்ற இணை

(A) அடி முரண்
(B) அடி மோனை
(C) அடி இயைபு
(D) இன எதுகை

75. விடைக்கேற்ற வினாவைத் தேர்க:

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை'

(A) தமிழர்க்குப் பெருமை தராதது எது?
(B) நமக்குள்ளே பேசுவது எது?
(C) பழங்கதைகளால் என்ன நன்மை?
(D) பழங்கதைகளின் மகிமை யாது?

76. விடைக்கேற்ற வினாவைத் தேர்க:

'இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா'

(A) இரட்டைக்கிளவி இரட்டித்தால் என்னவாகும்?
(B) இரட்டைக்கிளவி எவ்விடத்தில் வரும்?
(C) இரட்டிற் பிரிந்திசையாதது எது?
(D) இரட்டிற் பிரிந்திசைப்பது எது?

77. "சேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே" – இந்தத் தேசமெல்லாம் செழுத்திடுது – எனப் பாடியவர்

(A) கண்ணதாசன்

(B) தஞ்சை இராமையாதாஸ்

(C) மருதகாசி

(D) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்

78. கீழ்வருவனவற்றுள் கவிஞர் கண்ணதாசன் இயற்றாத நூல் எது?

(A) ஆயிரந்தீவு அங்கயற்கண்ணி

(B) இராஜ தண்டனை

(C) மாங்கனி

(D) கொய்யாக்கனி

79. உவமைக் கவிஞர் சுரதா இயற்றிய நூல் எது?

(A) நிலவுப் பூ

(B) சூரியகாந்தி

(C) தேன்மழை

(D) பூங்கொடி

80. தம்மை நாயகியாகக் கற்பனை செய்து நாரையைத் தூது விட்ட ஆழ்வார் யார்?

(A) பொய்கையாழ்வார்

(B) நம்மாழ்வார்

(C) குலசேகர ஆழ்வார்

(D) பெரியாழ்வார்

81. உமர்கய்யாம், 'ருபாயத்' என்ற பெயரில் எழுதிய நூலைக் கவிமணி மொழி பெயர்த்தார்.

அடிக் கோடிட்ட சொல்லின் பொருளை எழுதுக.

(A) எட்டடிச் செய்யுள்

(B) இரண்டடிச் செய்யுள்

(C) நான்கடிச் செய்யுள்

(D) இவை எல்லாம் தவறானவை

82. கீழ்க்காணும் சொற்களில் தொழிற்பெயர் அல்லாததை அறிக.

(A) அழுகை

(B) தொல்லை

(C) போக்கு

(D) தொழுகை

83. செயப்பாட்டு வினைச்சொற்றொடரைக் கண்டறிக.

(A) வ.உ.சி. தொல்காப்பியத்தைப் பதிப்பித்தார்

(B) தொல்காப்பியம் வ.உ.சி.யால் பதிப்பிக்கப்பட்டது

(C) பதிப்பித்தார் தொல்காப்பியத்தை வ.உ.சி.

(D) வ.உ.சி. பதிப்பித்தது தொல்காப்பியம்

84. 'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது' – இக்குறளில் அடி எதுகையாவது.

(A) குணமென்னும் – குன்றேறி

(B) குன்றேறி – நின்றார்

(C) குணமென்னும் – கணமேயும்

(D) கணமேயும் – காத்தல்

85. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்.

பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவியல் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார் – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

(A) தனி வாக்கியம்

(B) கலவை வாக்கியம்

(C) செயப்பாட்டு வினை வாக்கியம்

(D) பிறவினை வாக்கியம்

86. பிறவினை வாக்கியத்தை கண்டறிக :

(A) புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்

(B) அகநானூற்றுப் பாடல்களை மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திர சன்மர் தொகுத்தார்

(C) அகநானூற்றைப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி தொகுப்பித்தான்

(D) ஐங்குறுநூறு நூலைப் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் தொகுத்தார்

87. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குரிய பொருந்தாதச் சொல்லைத் தேர்க :

<u>பண்புத்தொகை</u>

(A) மென்கண்
(B) செய்வினை
(C) நன்கலம்
(D) அருவிலை

88. 'நெறியினில் உயிர்செகுத் திடுவ' – இதில் '<u>உயிர்செகுத்து</u>' எவ்விலக்கணத்தைச் சார்ந்தது?

(A) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

(B) வினையாலணையும் பெயர்

(C) வியங்கோள் வினைமுற்று

(D) இரண்டாம் வேற்றுமைத்தொகை

89. சரியானவற்றைத் தேர்க.

| | பொருள் | | திணை |
|---|---|---|---|
| 1. | எதிரூன்றல் | – | வெட்சி |
| 2. | மீட்டல் | – | வஞ்சி |
| 3. | செருவென்றது | – | வாகை |
| 4. | எயில்காத்தல் | – | நொச்சி |

(A) 1ம், 2ம் சரி
(B) 2ம், 3ம் சரி
(C) 3ம், 4ம் சரி
(D) 1ம், 4ம் சரி

90. பிரித்தெழுதுக :

நெடுநாவாய்

(A) நெடு + நாவாய்

(B) நெடுமை + நா + வாய்

(C) நெடுமை + நாவாய்

(D) நெடுநா + வாய்

91. 'நல்ல' எனும் அடைமொழியைப் பெற்ற நூல் எது?

(A) நற்றிணை
(B) குறுந்தொகை
(C) அகநானூறு
(D) ஐங்குறுநூறு

92. 'கடலில் கரைத்த பெருங்காயம் போல' இந்த உவமை வாக்கியம் உணர்த்தும் பொருள்

(A) பகர்தல்
(B) கலத்தல்
(C) வீணாதல்
(D) ஏமாறல்

93. தெரிநிலை வினையெச்சத்தை எடுத்து எழுதுக.

(A) நோயின்றி வாழ்கிறான்
(B) மெல்ல நடந்தான்
(C) நடந்து வந்தான்
(D) நன்கு பாடினான்

94. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கை | 1. | துன்பம் |
| (b) | நோ | 2. | கைப்பற்றுதல் |
| (c) | யா | 3. | ஒழுக்கம் |
| (d) | வெள | 4. | ஒருவகை மரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

95. ஈற்றயலடி 'சிந்தடி' பெற்று வரும் பா வகை

(A) நேரிசைச் சிந்தியல் வெண்பா
(B) இன்னிசைச் சிந்தியல் வெண்பா
(C) நிலைமண்டில ஆசிரியப்பா
(D) நேரிசை ஆசிரியப்பா

96. "சோவியத்து அறிஞர் தால்சுதாய் வழிகாட்டுதலால் திருக்குறள் மூலத்தை நேரடியாகப் படிக்க விரும்பியே தமிழ் பயிலத் தொடங்கினேன்" – எனக் கூறியவர்.

(A) பேரறிஞர் அண்ணா (B) பண்டித ஜவஹர்லால் நேரு

(C) காந்தியடிகள் (D) ஜி.யு.போப்

97. 'கவி காளமேகம்' எந்த சமயத்திலிருந்து எந்த சமயத்திற்கு மாறினார்?

(A) சைவத்திலிருந்து சமணத்திற்கு மாறினார் (B) சைவத்திலிருந்து வைணவத்திற்கு மாறினார்

(C) வைணவத்திலிருந்து சைவத்திற்கு மாறினார் (D) வைணவத்திலிருந்து பௌத்தத்திற்கு மாறினார்

98. உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்கப் பாடுபட்ட பெருஞ்சித்திரனாரின் இதழ் பெயரைத் தேர்ந்தெடு.

(A) இந்தியா (B) குயில்

(C) தமிழ்ச்சிட்டு (D) மணிக்கொடி

99. மேதையில் சிறந்ததன்று என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுவது

(A) கற்றது மறவாமை (B) ஒழுக்கம் உடைமை

(C) கண்ணஞ்சப் படுதல் (D) வாய்மை உடைமை

100. இலக்கணக்குறிப்பறிந்து பொருத்துக :

(a) வழிக்கரை 1. வினைத்தொகை

(b) கரகமலம் 2. உரிச்சொற்றொடர்

(c) பொங்குகடல் 3. ஆறாம் வேற்றுமைத்தொகை

(d) உறுவேனில் 4. உருவகம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |